# பல்கலைக்கழகத்தில் பகுதிநேர பட்டக்கல்வியில் பாலர் பள்ளி ஆசிரியர்களின் அனுபவத்துக்கு முக்கியத்துவம்




ஹாவ்லக் ரோட்டில் உள்ள என்டியுசி ஃபஸ்ட் கெம்பஸ் அமைப்பின் 'மை ஃபஸ்ட் ஸ்கூல்' பாலர் பள்ளியில் சிறுவர்களும் குழந்தைகளும் ஒன்று சேர்ந்து விளையாடுகின்றனர். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

என்டியுசி ஃபஸ்ட் கெம்பஸ் அமைப்பின் பாலர் பள்ளி ஆசிரியர்கள் சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகத்தில் தங்களின் பகுதிநேர ஆரம்பகால பாலர்பருவ பட்டக் கல்வியை ஆறு மாதங்களுக்கு முன்னரே முடித்து விடலாம்.

அந்தப் பல்கலைக்கழகம் அறிவித்திருக்கும் புதிய ஏற்பாட்டின் வழி இது சாத்தியமாகிறது.

அடுத்த ஆண்டு முதல், பாலர் பள்ளி ஆசிரியர்களின் பணி மற்றும் கற்றல் அனுபவத்தைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு சில பாடங்களிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

இதன்படி, தங்களின் பணி மற்றும் கற்றல் அனுபவத்தால் ஆசிரியர்களுக்கு 20 மதிப்பெண் புள்ளிகள் அளிக்கப்படும். அது நான்கு பயிற்சிகளுக்குச் சமமாகும்.

இதனால், அவர்கள் இயல்பான பட்டக்கல்வி நிறைவுபெறுவதற்கு ஆறுமாதங்களுக்கு முன்னதாகவே படிப்பை முடிக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

"தங்கள் பகுதிநேர ஆரம்பகால பாலர்பருவ பட்டக் கல்வியைக் கற்கும் ஆசிரியர்களுக்கு அவர்களின் பணி மற்றும் கற்றல் அனுபவத்தால் மதிப்பெண் புள்ளிகள் வழங்கப்படும் முறையை ஓர் உயர்கல்விக் கழகத்துடன் இணைந்து செயல்படுத்தியுள்ள முதல் பாலர் பள்ளி நடத்துநராக நாங்கள் திகழ்கிறோம்," என்றார் என்டியுசி ஃபஸ்ட் கெம்பஸ் அமைப்பின் தலைமை நிர்வாகி திரு சான் டீ செங்.

அடுத்த ஆண்டிலிருந்து, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு கல்வி உதவி நிதி அளிக்க வகை செய்யும் பொருட்டு, ஆண்டுக்கு ஒரு மில்லியன் வெள்ளி ஒதுக்கப்படும்.

அவர்கள் தங்கள் அனுபவம், தலைமை ஆசிரியர், துணைத் தலைமை ஆசிரியர் போன்று இத்துறையில் உயர் தலைமைத்துவ பதவிகளை அடையும் வாய்ப்புகள் ஆகியவற்றைப் பரிசீலித்து தேர்வு செய்யப்படுவார்கள்.

என்டியுசி ஃபஸ்ட் கெம்பஸ் அமைப்பின் கற்றல், பகிர்தல் விழாவில் நேற்று சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கல்வி அமைச்சர் ஓங் யி காங், பல்கலைக்கழக பட்டக்கல்வியைப் பாலர் பள்ளி துறைக்கு அருகில் கொண்டு வந்திருப்பதைப் பாராட்டினார்.

"சிறு பிள்ளைகளை அவர்களின் இளம் வயதிலிருந்தே தயார்படுத்துவது மிக முக்கியம் என்பதை நாம் கடந்த பல ஆண்டுகளாக உணர்ந்து வந்துள்ளோம்.

"ஆக, பாலர் பள்ளி ஆசிரியர்களின் தகுதியையும் அதற்கு ஏற்றாற்போல உயர்த்த வேண்டும்," என்றார் திரு ஓங்.

"பட்டக்கல்விக்கு விண்ணப்பிக்கும் நமது பாலர் பள்ளி ஆசிரியர்கள் இதன் மூலம் தங்கள் கற்றல் அனுபவத்தைப் பெருக்கிக் கொண்டு அதன் மூலம் தங்கள் பணிகளில் சிறந்து விளங்க விரும்புகிறார்கள்," என்றும் திரு சான் மேலும் கூறினார்.